செ.வெ.எண்.85 நாள்.26.07.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் கார் சாகுபடிக்கு இராமநதி அணை, கடனா நதி அணை மற்றும் அடவிநயினார் கோவில் அணை இன்று திறப்பு – இதன் மூலம் 7,143 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் –

இராமநதி அணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

–––––––

திருநெல்வேலி மாவட்டத்தில் கார் சாகுபடிக்கு இராமநதி அணை, கடனா நதி அணை மற்றும் அடவிநயினார் கோவில் அணை இன்று திறப்பு – இதன் மூலம் 7,143 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். திருநெல்வேலி மாவட்டம், ராமநதி அணை திறப்பு விழா நிகழ்ச்சி இன்று (26.07.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, இராமநதி அணையினை திறந்து வைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநதி அணை, கடனாநதி அணை, அடவிநயினார் கோவில் அணை ஆகிய ஆணைகள் திருநெல்வேலி மாவட்டத்தின் கார் சாகுபடி பருவத்திற்காக இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இராமநதி அணையிலிருந்து 60 கன அடி நீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 11 கிராமங்களைச் சார்ந்த 1008 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். கடனா நதி அணையிலிருந்து 125 கன அடி நீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 12 கிராமங்களைச் சார்ந்த 3987 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அடவிநயினார் கோவில் அணையிலிருந்து 25 கன அடி நீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 11 கிராமங்களைச் சார்ந்த 2147 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்த மூன்று அணைகள் மூலம் திறந்து வைப்பதன் மூலம் 34 கிராமங்களைச் சார்ந்த 7,143 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இன்று (26.07.2017) முதல் 31.10.2017 வரை 98 நாட்களுக்கு தண்ணீர் கார் சாகுபடி பாசனங்களுக்கு திறந்து விடப்படுகிறது. இந்த நீரினை இப்பகுதி விவசாயிகளின் தேவைக்கும், பொதுமக்களின் குடிநீர் தேவையினையும் பூர்த்தி செய்யும். முறையற்ற முறையில் நீரினை உபயோகப்படுத்துவோரை கண்காணிக்க வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளின் சார்பில் குழு அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.பி.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., பொதுப்பணித் துறை சிற்றாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் திரு.ஜெயபாலன், உதவி செயற்பொறியாளர் திரு.சங்கர்ராஜ், உதவி பொறியாளர்கள் திரு.முருகேசன், திரு.கணபதி, திரு.கிருஷ்ணமூர்த்தி, மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.